R4822

# LOOSING THE FOUR WINDS OF HEAVEN
# வானத்தின் நான்கு காற்றுகளை அவிழ்த்துவிடுதல்

முந்தைய வருகையைக் காட்டிலும் நமது சமீபத்திய ஐரோப்பிய வருகை மக்களிடையே இனி அமைதியின்மை இல்லை என்பதை வெளிப்படுத்துகிறது. எல்லா இடங்களிலும் செழுமைக்கான அநேக ரூபகாரங்களை கண்டு உண்மையிலேயே நாங்கள் ஆச்சரியப்பட்டோம். சில வன்முறை மட்டுமே இருந்தன. இந்த கருத்தை சிலர் உறுதிப்படுத்தினர். ஆனால் ஆழமான அதிருப்தி இருந்தது. ஆனால் அது வெளியில் தெரியவில்லை என்பது மற்றவரின் கருத்தாக இருந்தது. இன்னும் சில வருடங்களில் இந்த யுகம் மோசமாக ஆபத்தின் காலத்துடன் முடிவடையப் போகிறது என்பது நமது வாசகர்களுக்குத் தெரியும். இது அக்டோபர் 1914க்கு முன்னரே திடீரென்று வரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். நாம் இதுவரை வேதவாக்கியங்களை புரிந்து கொண்டபடி, புறஜாதியாரின் காலம், புறஜாதியாருக்கு பூமியின் ஆளுகையை குத்தகைக்கு கொடுத்த காலம் முடிவடையும். ஆகையால் அந்த காலமே மேசியாவின் ராஜ்யம் தனது அதிகாரத்தை உபயோகிக்கக்கூடிய காலமாக இருக்கும்; தேசங்களை அது குயக்கலத்தைப் போல உடைத்துப் போடும் என்று வேதவாக்கியங்கள் அறிவிக்கின்றன. அந்த சமயத்தில் சபையானது முழுமையடைந்து, இரண்டாம் திரையைக் கடந்து “மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்” நுழைந்திருக்கும்; முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று பரிபூரண ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றிருக்கும். நாம் இதுவரை அறிவித்தது போல, எப்படி சபை வகுப்பார் அனைவரும், அந்த தேதிக்கு முன் மரித்து, “ஒரு இமைப்பொழுதிலே” மறுரூபமடைவார்கள் என்பது நமக்கு தெளிவாக இல்லை.

இந்த குழப்பங்களை நாம் கவனிக்கும் போது, வேதாகம காலக்கணக்கின் அம்சங்களில் எந்த தவறையும் காணமுடியவில்லை என்பதையும் கவனிக்கும் போது, நமது சிந்தை, புதிய முக்கியத்துவத்தை உடையதாக காணப்படுகிற இன்னொரு பழைய வேதவாக்கியத்துக்கு அனுப்பப்படுகிறது. அந்த வசனமாவது: “பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின் மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின் மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்க கண்டேன்...... நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைப் போட்டு தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள்.” (வெளிப்படுத்தல் 7:1-3)

இந்த அடையாளமான காற்றுகள் சண்டை, அராஜகம், மகா ஆபத்துக் காலம் என்பதை குறிக்கும் என்பதை நாம் நீண்ட நாட்களாக பார்க்கிறோம். தற்கால சத்தியத்தின் மூலமாக தெரிந்து கொள்ளப்பட்ட வகுப்பாரின் ஜீவனோடிருக்கும் அங்கங்களை முத்திரைப் போடும் வரை, அறுவடை வேலை முடியும் வரை தெய்வீக வல்லமையால் அது நடைபெறும். இந்த நான்கு காற்றுகளும் அவிழ்த்து விடப்பட்டு, சேர்ந்து வந்து ஒரு சுழல்காற்றை ஏற்படுத்தும். அது வரவிருக்கிற மகா ஆபத்தின் காலத்தை குறிக்க வேதகாமத்தில் அடையாளமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அடையாளமாக சொல்லப்பட்டிருக்கிற இந்த சுழல் காற்றில் சபைக்கு முன்னடையாளமான எலியா எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு ஒத்திருக்கிறது. காற்றுகள் தப்பறையான போதகங்களையும் குறிப்பிடுகிறது. (எபேசியர் 4:14)

## “ஆகாயத்து அதிகாரப்பிரபு”

மேற்கூறியவைகளுக்கு எதிராக இனி பார்க்காமல், அதை உறுதிப்படுத்தும்படியாக ஒரு வெளிச்சத்தை தரப்போகிறோம். இந்த காற்று அல்லது ஆகாயத்து அதிகாரங்கள், அடைத்து வைக்கப்பட்ட விழுந்து போன தூதர்களை குறிக்கிறது. இவர்களது பிரபு, “ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய” சாத்தான். தெய்வீக சக்தி கட்டுப்படுத்தியிருக்காவிட்டால் நீண்ட காலத்துக்கு முன்பு அடையாளமான பூமி, சமுத்திரம் மற்றும் மரங்களை கெட்ட தூதர்கள் சேதப்படுத்தியிருப்பார்கள் என்பது எங்கள் கருத்து. பூமியானது அடையாளமாக ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தைக் குறிக்கிறது. கடல் என்பது ஒழுங்கற்ற வெகு ஜனங்களையும் மரங்கள் விசுவாச வீட்டாரையும் குறிக்கிறது. விழுந்து போன தூதர்களை திடீரென்று அவிழ்த்து விடுதல் என்பது வரக்கூடிய ஆபத்து திடீரென்று வருவதைக் குறிக்கிறது. இது வேதத்தில் அநேக இடங்களில், இதே போல, “ஒரு மணி நேரத்தில்,” “கர்ப்பவதியானவருக்கு வேதனை சடுதியாய்,” “நோவாவின் நாட்களில் நடந்தது போல,” “லோத்தின் நாட்களில் நடந்தது” போல என்று வேத வாக்கியங்களில் காண்கிறோம்.

மறுபடியும் நாம் நோவாவின் நாட்களிலும் லோத்தின் நாட்களிலும் அழிவு சடுதியாய் வந்ததில் மாத்திரம் ஒத்து இராமல் அந்த காலத்தின் வன்முறை மற்றும் விபச்சாரங்களுக்கும் ஒத்திருக்கிறது. இதற்கு முன் இல்லாத அளவுக்கு மனிதரின் தவறான அபிப்பிராயமும் வேட்கையும் உஷ்ணத்தை வெளிப்படுத்துகிறது. சமூகத்தைக் கட்டுப்படுத்த ராணுவம் மற்றும் போலீஸ் ஒழுங்கு முறையினால் இயலாதிருக்கிறது. அதிருப்தி, சுயநலம், வேட்கை, வெறி முதலானவை தற்கால நிலைமையில் மனுக்குலத்தை வசீகரிக்கக்கூடும். “ஆகாயத்து அதிகாரங்கள்” கொஞ்ச கால சுதந்தரத்தை அனுபவிக்க அனுமதிக்கப்படும் போது இருதயங்களில் தீய போக்கை வெளிப்படுத்தும். ஏனெனில் சுதந்தரம் உண்மையான சந்தோஷத்தை கொண்டு வராது என்பதை விளக்கவேயாகும். தெய்வீக தேவைக்கு முழு இசைவு இருந்தால் மட்டுமே உண்மையான சந்தோஷத்தைக் கொண்டு வரும்.